# புதிய தலைமுறை கவிஞர்களின் கவிதைகளில் வாழ்வியல் கூறுகள்

ஹெ. மார்ட்டின் ராபர்ட & முனைவர். சு. இளமாறன்
தமிழாய்வுமையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர் – 629802,கன்னியாகுமரி மாவட்டம்.

90

**முன்னுரை:**

நவீன கவிதை வடிவம் வாழ்வின் சகல கூறுகளையும் எழுதிபார்த்தது.சிறுகதைகளில், நாவல்களில் பேசுகின்ற செய்திகளை கவிதை மொழியில் உருவாக்க முடியுமா அது கவிதையாகுமா என்கின்ற பல விதமான கேள்விகள் இருக்கின்றன. இந்த கேள்விகளுக்கு விடை கிடைப்பதுபோல நவீன கவிஞர்கள் தங்களது கலை சார்ந்தும் தங்களின் தொழில் சார்ந்தும் எதிர் கொண்ட நெருக்கடிகளையும் நெகிழ்ச்சியான அனுபவங்களையும் தங்களது வட்டார மொழியோடு கவிதையில் கொண்டு வந்தார்கள். இந்த வாழ்வியல் கூறுகள் எவ்வாறெல்லாம் வெளிப்படுகின்றன என்பதை ஆய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் கலை ஆளுமை குறித்த பதிவுகள்

நாட்டாமுட்டி ஏடெடுத்து
ஒட்டியம் சல்லியம் செய்து
அந்தரத்தில் ஆகர்சனமாய்
பாதாள புலையனை வசியம் செய்து
திசைகாட்டி முப்பத்து மூணு தேவர்களையும்
மோகனம் செய்தேன்
காளி நாடகம் படித்து அண்டபிண்டம்
அகிலம் ஈரேழும் நடுங்க
நீச பேத பிசாசுகளை
வுpத்து வே~ணம் செய்து
புல் புண்டு வரை அழித்தேன்
----------------------------------------------
கும்பிட்டு செவு போட்டேன்
ஆசானுக்கு1

இக்கவிதை ஒடுக்கப்பட்ட சமுகத்தில் பிறந்த மனிதன் தீவிரமான கலைஞனாக இருந்தால் அவனது கலை அவனை ஆளுமைமிக்க மனிதனாக மாற்றும் வர்மம், சிலம்பம் இதனோடு தொடர்புடைய கலைஞன் தனக்கும் தன்னுடைய குடும்பமும் இந்த சமூக சூழலில் வாழ்வதற்கு இந்தக் கவிதை முக்கியமாகிறது. பொதுவாக ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த மனிதன் பொருளாதார பின்புலமும் இல்லாமல் ஜாதிய பின்புலமும் இல்லாமல், எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருப்பர்.இந்த கவிதை வரியில் அ~Êட



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கர்மத்தால் புலம் பெயராமல் மிஞ்சி இருக்கிறேன் என்ற வரி வருகிறது.இந்த வரிக்குள் வாழ்வயல் கூறு சார்ந்த பல அர்த்தங்கள் புதைந்து கிடக்கிறது. ஒருவன் தனது பிறந்த மண்ணை வி;ட்டும் சுற்றங்களையும் விட்டும் வாழ்வது என்பது வேதனைக்குரிய நிலையாகும். அந்த நிலையை இந்த கவிதை கேள்விக்கு உட்படுத்துகிறது.இந்த கவிதைக்குள் புலம்பெயர் வாழ்க்கை நடக்கவில்லை. நடக்காமல் அவனுடைய கலை பலத்தினால் தாண்டியிருக்கி;றான். இல்லையென்றால் வென்றிருக்கிறான். அவன் ஒடுக்கப்பட்ட ஆளுமையாக இல்லாமல் அனைவரும் பாராட்டும் ஆளுமையாக மாறியருக்கிறான் என்பதில் இன்னொரு கோணத்தில் வாழ்வியல் செய்தியை வெளிப்படுத்தும் கவிதையாக கூறலாம்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வும் தொழிலும்

காலங்காத்தால

அருவா பெட்டி

சுண்ணாம்பு பெட்டி

கலக்கு மட்டை

மிருக்குத் தடி

நெஞ்சுவார்

திளாப்பு

இடிக்கி

கலையம்

--------------------------------------------

-----------------------------------------

அலையும் பனைமரங்கள்2

ஒரு சமுகத்தின் பண்பாட்டின் அடையாளம் சார்ந்த வாழ்வியல் சித்திரம் இந்தக்கவிதையில் முன்வைக்கிறது.பனை மரம் குறித்த பனை தொழில் குறித்த காட்சி ஓவியம்.இந்த கவிதை மூலம் விரித்து போடப்பட்டுள்ளது. பனை சமூகத்தின் வரலாறு பனை சமூகத்தின் வாழ்வியல் அடையாளம் பனை மரம் தென்னை வயல் இவைகள் சார்ந்த வாழ்க்கையாகும்;;.இதில் கிடைக்கக்கூடிய பொருட்களை வைத்து அந்த பொருட்களை விற்று அதன்மூலம் கிடைக்கின்ற பணத்தை வைத்து அவர்கள் வாழ்க்கை நடத்தினார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.அந்த வகையில் இந்த பதிவு நீண்டகால ஞாபக பரப்பிலிருந்து ஒரு தாக்கத்தின் வாழ்வை எழுதிச்செல்கிறது. அவரின் நீண்ட கால தொழிலாகவும், அன்றாட வாழ்வு சித்தி;ரமாகவும், பனை இருந்திருக்கிறது என்பதில் மறுப்பில்லை. இந்த கவிதையில் பேசிய தாத்தா பனை சம்மந்தமான எல்லா வேலைகளை செய்பவராகவும் பனை ஏறுவதற்கான அருவா பெட்டி, சுண்ணாம்பு பெட்டி, கலங்கு மட்டை, மிருக்குத்தடி, திளாப்பு, நெஞ்சுவார், இடுக்கி இவைகளை எல்லாம் எடுத்துச் செல்லும் தாத்தாவாக நமக்கு காட்சியளிக்கிறார். மிகநுட்பமான தொழில்நுட்ப கலைஞனாகவும் காட்சி தருகிறார்.எப்படியென்றால் மிருக்குத்தடியை தலையில் சாய்த்து வைத்து காய்த்து போன கைகளோடு ஏறி சுருக்கு மட்டைகளை சீவி பனை மினிகளை திருகி ஆறாவது நாள் கலையம் கட்டுவாரு.அதன்பிறகு அக்கானி கள் இவைகள் எடுப்பது அக்கானியை வைத்து கருப்பட்டியை தயாரிப்பது என பல வாழ்வியல் செய்திகளை முன்வைக்கப்படுகிறது. எப்படி ஒரு கலைஞன் தனது கலைக்காக வாழ்வை அர்ப்பணிக்கிறாரோ அதுபோல அர்ப்பணிப்பு



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மனநிலையோடு தான் சார்ந்த தொழிலில் ஈடுபட்டு வெற்றிகரமாக வாழ்க்கை நடத்துகின்ற செய்தி இந்த கவிதை மூலம் உணர முடிகிறது.

மலையில் வடித்த சாரயத்தை
கேன்களில் வாங்கி
தென்னந்தோப்பு
வயக்காடு
மாந்தோப்பு
மரச்சீனி தோப்பு
ஒதுக்குப் புறாமாகவுள்ள
சந்து பொந்துகளில் வியாபாரம்
----------------------------------------------------
---------------------------------------------------
படுக்கையில் கிடக்காரு
நாடார்3

விளிம்புநிலை சமூகத்தின் வாழ்வியல் சித்திரம் இந்த கவிதையில் முன்வைக்கப்படுகிறது.சாரயம் காச்சி விற்பனை செய்கின்ற கதாபாத்திரம் பற்றி இந்த கவிதை பேசுகிறது.இந்த கவிதை தமிழ் கவிதையில் அதிகமாக பதிவாகாத கவிதையாக பார்க்கலாம்.சாரயம் என்பது போதை பொருளோடு சம்மந்தப்பட்டது தான் கள்ளத்தனமாக அரசுக்கு தெரியாமல் மலை பகுதிகளிலும் ஆள்நடமாட்டம் இல்லாத தோப்புகளிலும் இதனை விற்பனை செய்வது வழக்கம்.இதை தொழிலாக கருதி வாழுகின்ற ஒரு கூட்ட மக்கள் இருக்கின்றார்கள்.பொதுவாக தனிமனித ஒழுக்கம் சமூகநீதி புனிதம் இவைகளை தாண்டிய மக்கள் கூட்டம் எப்போதுமே உண்டு.இந்த மக்கள் கூட்டத்தை இந்த கவிதை பேசுகிறது.ஒரு காலத்தில் இந்த சாராயம் என்பது சமூக குற்றமாக இருந்தது.இவர்கள் போலீசை ஏமாற்றியும் போலீசுக்கு லஞ்சம் கொடுத்தும் வேலை செய்தார்கள் என்பதில் மறுப்பில்லை.இந்த கவிதையில் இப்படியான வாழ்வியல் சித்திரமும் இருக்கிறது என்பதை முன்வைப்பதால் மிக முக்கியமான கவிதையாக கொள்ளலாம்.இன்று வேதனைக்குரிய நிலைமை என்பது முறைபடுத்தப்பட்ட மதுவாக இதனை கணக்கில் எடுத்துக்கொண்டு அநேக லாபம் சம்பாதிக்கின்றது என்பது வேதனைக்குரிய நிலையாகும்.

சூரியனின் கதிர்கள் தலையில்
செங்குத்தா விழுகிற உச்சிப்பொழுதில
தலையில் சாராயக் கேன்களைச்
சுமந்தவாறே ஐந்து கி;லோமீட்டர்
நடந்தே வரணும்
தலையில் பாரம் அதிகமாச்சுனா
---------------------------------------------------
--------------------------------------------------

சுடலைமுத்து தாத்தா4

முன்னர் குறிப்பிட்ட தொடர்புடைய கவிதைதான் சாராயக் கேனோடும் சுடலைமுத்து தாத்தாவின் இந்த கவிதை.இது ஒரு மலை வாழ்க்கையை ஞாபகப்படுத்துகிறது. முன்னர் குறிப்பிட்ட கவிதையின் தொடர்ச்சி கூட இதனை சொல்லலாம்;.மலையில் காச்சுகின்ற சாராயத்தை தலையில் சுமந்து கொண்டு 5 கிலோமீட்டர் மேல் வரவேண்டும்.பாரம் அதிகமாக இருந்தால் ஓடுகின்ற ஆற்று தண்ணீரில் போட்டால் அது மிதந்துகொண்டே கரைந்துபோகும்.அதை கண்காணித்துக்கொண்டே செல்ல வேண்டும்.இல்லாவிட்டால் யாராவது களவாண்டு சென்று விடுவார்கள்.ஆகையினால் கண்ணும் கருத்துமாக செல்ல வேண்டும்.மாட்டிக்கொண்டால் போலிஸ் அடி உறுதி கேசும் ஆகி விடும்.இப்படியான ஒரு வாழ்வியல் சித்திரத்தை இந்த கவிதை முன்வைக்க தவறவில்லை. “கணையத்தில் ரணம் தோல் தொடர்பான வியாதிகள், தாம்பத்திய வாழ்க்கையில் பிரச்சனை ஊட்டச்சத்து குறைபாடு, வயிற்றுப்புண், ஜீரண சக்தி குறைதல், புற்றுநோய் அபாயம,; கல்லீரல் வீக்கம் இப்படி மதுவின் தீமைகளை பற்றி பல பதிவுகளை நாம் பார்க்கலாம்”.5

“அதுபோல கள் உண்ணாமை என்ற அதிகாரத்தில் தீமை பற்றி வள்ளுவர் பேசுகின்றார்.

உட்கப் படாஅர்; ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கட்;காதல் கொண் டொழுகுவார்6

போதை பொருள் மீது எப்போதும் விருப்பம் கொண்டு இருப்பவனை கண்டு எவரும் பயப்படமாட்டார்.வாழும் காலத்தில் மரியாதை இழந்து போவார்கள் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

அப்பாவுக்கு அத்துப்படி
ஆனக்கிடங்கு மலைபுராவும்
செறுபத்திலேயே
கரிவெட்டி கூடப்பெறப்புகளை
கரையேத்தியே விட்டாரு
கட்டுச்சோறு பொதியோடு
கோடாலி வெட்டருவா
செங்கோடன் மம்மட்டி
எடுத்திட்டு ஆத்தங்கரையோரமா
ஆனகடங்கு மலைக்கு
தொடமாட்டு போவாரு
ஆனகிடங்கு மலைய பாக்கும் போதெல்லாம்
அப்பா நடந்து வறாரு
சுமையோடு7

இந்தகவிதை செங்கல் சுள்ளை தொகுப்பினுடைய கடைசி கவிதையாகும்.ஆனைகிடங்கு மலையில் விறகு சுமக்கின்ற கதாபாத்திரம் எனற சித்தரிப்போடு இந்த கவிதை துவங்குகிறது.நம் முன்னோர்கள் காட்டில் விறகு சுமந்து வாழுகின்ற வாழ்க்கை இருந்தது.கட்டுச்சோறு பொதியோடு கோடாரி, வெட்டருவா, மம்மட்டி எல்லாம் எடுத்துக்கொண்டு ஆனைகிடங்கு மலைக்கு அப்பா போவாரு.பாறை இடையே பட்டுப்போன

மரங்களின் மூட்டை தோண்டி கோடாரி கொண்டு விறகு வெட்டுவார்.சாராயம் வடிக்கக்கூடிய இடத்தில் உள்ள கருப்பட்டி துண்ட வாங்கி கட்டுச்சோற பிரிச்சு காந்தாரியும் கருப்படடியும் வச்சு சாப்பிடுவாரு.ஒத்தயடி பாதையில மலை ஏறும்போது சுக்கு நாறி புல் கீறுகின்ற வலி தெரியாமல் வலியையும் பொருட்படுத்தாமல் விறகு வெட்டி மலையிலிருந்து கொண்டு வருவார்கள்.இப்போது அந்த ஆனைகிடங்கு மலையை பார்க்கும் போதெல்லாம் அப்பா சுமையோடு விறகு கெட்டை தூக்கி கொண்டு வருவதாக கவிதை முடிகிறது.

"இந்த கவிதை பற்றி நட.சுpவக்குமார் பேசும்போது ஆனகிடங்கு மலையும் ஒருகட்டு விறகும் என்ற கவிதை பற்றி பேசுகின்றார்.மையபரப்புக்கு இன்னும் வராத ஒரு பண்பாட்டு அடையாளாக் குரலை மிக நேர்த்தியாக உள்வாங்கி வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனகிடங்கு மலையில் மரம் வெட்டி கரி எடுக்க போகின்ற அப்பா பற்றிய செய்தியையும் கருப்பட்டியும் காந்தாரி மிளகும் வைத்து சாப்பிட்ட வாழ்வு மலையேறுகையில் உடலில் வருகின்ற வியர்வை விறகு கட்டுகளோடு மலையை விட்டு கீழே இறங்கும் அப்பா. இப்போது ஆனைகிடங்கு மலையை பார்க்கும்போதெல்லாம் ஆனைகிடங்கு மலை மட்டும் தெரியவில்லை.மலையில் சுமையோடு நடந்து வருகின்ற அப்பா மட்டுமே தெரிகிறார் என்று கவிதை முடிகிறது. இந்த ஆதித்தமிழ் பழங்குடி வாழ்வு நம் நெஞ்சை நனைத்துவிட்டு செல்கிறது".8

மலை பிரதேசத்து ரப்பர் தொழில் குறித்த வாழ்வு
டெம்பிளேட்டால் அளவு பிடிச்சு
கொறண்டியால் கான் வடிச்சு
பால்வெட்டு கத்தியால்
பால்வெட்டும் அப்பாவிற்கு
மார்ச் மாத சீசன் லீவில் தான் ஆசுவாசம்
ஒண்ணரை ரூபாய் சம்பளம் அண்ணைக்கு
-------------------------------------------------------------------
எந்த சங்கங்களும் தீர்த்து வெச்ச பாடில்லை9

இக்கவிதை ஒரு ரப்பர் மரத்தில் பால் வெட்டி பிழைக்கக்கூடய வாழ்வியல் சித்திரத்தை முன்வைக்கிறது. டெம்பிளேட்டால் அளவு பிடிச்சு கொறண்டியால் கான் வடிச்சு பால் வெட்டும் கத்தியால் பால் வெட்டும் அப்பா இப்படியாக துவங்குகின்ற பால் வெட்டும் அப்பா குறித்த வாழ்க்கையை இந்த கவிதை பேசுகிறது. மிக குறைவான சம்பளத்தில் குடும்ப வாழ்க்கை நடத்துகின்ற ஒரு அப்பாவின் வலியை மகனின் பார்வையில் இக்கவிதை எழுதிச்செல்கிறது. இந்த கவிதையின் இன்னொரு பகுதியில் சம்பளம் குறைவாக இருப்பதால் பலரும் கொத்த வேலைக்கு சென்றுவிட்டார்கள.; பிள்ளைகள் பால் வெட்டக்கூடாது என்றும் எங்களையும் அவர் பால் வெட்ட பழக்கவில்லை.இப்படியான வாழ்வியல் சித்திரத்தற்கிடையேயான அந்த கவிதையின் கடைசி இரண்டு வரி இன்னும் கொஞ்சம் வலியை அதிகப்படுத்துகிறது. எங்களுடைய சங்கடத்தை எந்த சங்கமும் தீர்த்து வைத்த பாடில்லை என்று பேசும்போது நிகழ்கால வாழ்வு நம் கண்முன்னே நிறுத்தப்படுவதை நாம் பார்க்கலாம்.

ஊருக்கு அழகு காயல்
காயலை சுத்தி மூங்கில்கூட்டம்

காயலுக்கு கடைசி அத்தம்

மூவாத்து முக்கு

ஒரு தடவ

ஊருக்குள்ள ஒன்பது யானை

சிவப்பு துண்டு உடுத்து

குளிச்சுக்கிட்டிருந்த சுந்தரம்

அடிச்சு புரண்டு ஓடினார்

---------------------------------------------

யானை மாதிரி ரப்பர்10

ஊரில் ஒன்பது யானை என்று வருகின்ற இந்த கவிதை குமரிமாவட்ட நிலப்பரப்பை இயற்கை பின்புலம் சார்ந்து யோசிக்ககூடிய ஒரு கவிதையாகும்.குமரி மாவட்ட சூழலில் ரப்பர் மரத்திற்கான ஒரு இடம் இருக்கிறது.ரப்பரை நம் மக்கள் பணப்பயிராக பார்ப்பதால் மீதி மரங்களை முறித்து மாற்றுகின்ற ஒரு கட்டாயம் நமக்கு ஏற்படுகின்றது. அது ஒரு பணப்பயிர் வகையாக இருந்தாலும் மரிச்சினி, வாழை, தென்னை மாதிரியான பல மரங்களை முறிக்கின்ற தன்மையுண்டு அப்படி முறிக்கும்போது அது பணப்பயிராக இருந்தால் கூட அந்த பணப்பயிரை நாம் இந்த தலைமுறையினருக்கு கொடுப்பதன்மூலம் இயற்கை பாதிப்பும் நிலத்தடி நீரின் பாதிப்பும் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. அந்த வாய்ப்பை இக்கவிதை முன்வைக்கிறது.ஊருக்குள் ஒன்பது யானைகள் ஒரு காலத்தில் வந்து தொந்தரவு பண்ணியதாகவும் அதனை அகற்ற அணுகுண்டு வெடி வைத்து பயன்படுத்தி கடைசியாக யானையை விரட்டி விட்டன. ஆனால் யானையை விரட்டிய இடத்தில் மற்றுள்ள மரங்களையெல்லாம் அழித்துவிட்டு யானை போலவே ரப்பர் ஆகிவிட்டது என்ற ஆதங்கத்தை இக்கவிதை வெளிப்படுத்தும்போது சூழலியல் சார்ந்த கவிதை பிரதியில் இந்த கவிதை முக்கியத்துவம் பெறுகிறது.

அடைமழை பெஞ்சிட்டா

ஊருல யாருக்கும் வேலை இருக்காது

அஞ்சுக்கும் பத்துக்கும்

அல்லோலப்படுவாங்க

ஒரு வாரம் கூட வேல

இல்லாம இருக்கும்

குடிச்சு வர்றவங்க

வீட்ல புகம்பம் தான்

மழை தண்ணில பாலா ஓடும்11

இந்த கவிதையும் மழைக்காலத்தில் பால் வெட்டி கொண்டு வருகின்ற அப்பா பால்வெட்டக் கூடிய நேரத்தில் மழைபெய்து மழைத்தண்ணி பாலா ஓடும் என்கின்றபோது ஒரு விளிம்புநிலை வாழ்வோவியம் நம் கண்முன்னே நிறுத்தப்படுகிறது. தமிழ் கவிதைகளில் இன்னும் அறியப்படாத பதிவு ரப்பர் வெட்டும் தொழிலாளியின் மன க~;டங்களை எழுதி செல்லும்போது ரப்பர் நம் இதயத்திற்குள் ஒட்டிக்கொள்கிறது.

சிற்ப வேலைப்பாடும் தொன்மகூறுகளும்

தலை கால்கள் றெக்கையென



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

உதிரி உறுப்புகளை
தச்சிணைத்து
சிற்பக் கண் திறக்க
சட்டென உயிர்பெற்று
சிறகடித்து பறந்தது
கருடன்
வீதி உளியை விட்டெறிந்து
அதன் ருப லட்சணங்களை சிதைக்க
பொத்தென்று விடிந்தது

-----------------------------------------------------

மதுசுதனப் பெருமாளின் வாகனம்12

ஒரு சிற்பியினுடைய சிற்பக்கலையும் அவர்களுடைய வாழ்வியல் சித்திரமும் சேர்ந்து இக்கவிதை அமைந்திருக்கிறது.ஒரு சிற்பி சிற்பம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு கருடன் பறந்து வருவது சிற்ப கண் திறக்க சட்டென்று உயிர்பெற்று சிறகடித்து பறந்தது.கருடன் அதன் ரூப லட்சணங்களை சிதைக்க பொத்தென்று விழுந்தது.இன்னும் உடைபடாத இறக்கையோடு இருப்பதாக மதுசூதனன் வாகனம் இருப்பதாக கவிதை முடிகிறது.இந்த பின்புலத்தில் இந்த கவிதையை நாம் யோசித்தால் இதற்கு வாழ்வியல் பின்புலமும் ஒரு கலையின் பின்புலமும் மாயஜhல எதார்த்த கூறும் இருப்பதை நாம் காணலாம்.

**முடிவுரை**:

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு என்பது கலைகளோடும் உழைக்கும் தொழிலோடும் சம்மந்தப்பட்டது. அன்றாடம் உடல் உழைப்பை செலுத்தி வயல்களில், மலைகளில், ரப்பர் காடுகளில், ரப்பர் பால் வெட்டியும் நேர்த்தியான வர்மம், சிலம்பம் மாதிரியான கலைகளில் ஈடுபட்டும் எப்படியெல்லாம் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்வினுடைய ஒரு பகுதி எப்படியெல்லாம் இருந்தது என்பதை இந்த ஆய்வு நமக்கு மிக தெளிவான வகையில் வெளிப்படுத்தித் தருகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. நடசிவக்குமார்இ தம்பிராட்டியின் பரியங்கம் பக்-19
2. த.ரெஜித்குமார்இ செங்கல் சுள்ளை பக்-13
3. மேலது பக்-75,76
4. மேலது பக்-77
5. நுடரவார.ஊழஅ
6. திருக்குறள் 921
7. ரெஜித்குமார், செங்கல் சுள்ளை பக்-105
8. நடசிவக்குமார், செம்புலப்பெயல் நீரில் எரிந்த அன்புடை நெஞ்சம் பக் 11
9. பென்னி;யமின் மூங்கில் தெப்பம் பக்-14
10. மேலது பக்-15
11. மேலது பக்-19
12. தாணுபிச்சையா உறைமெழுகின் மஞ்சாடிபொன் பக்-51


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599